சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. 118 / 2019

மனுதாரர் / எதிர்மனுதாரர் ம.சா.2 வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திரு.முத்து அவர்களால் 44/1969 பிரிவின்படி 18.04.2023 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | முருகன் | கிராமம் : | |
| த/பெ : | கருப்பையா | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணம் தாக்கல் செய்கிறேன்.

1) ஆதார்அடையாள அட்டை நகல் - ம.சா.ஆ-4 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை என்றால் சரிதான். மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் இருந்து சுமார் 150 அடி தூரத்தில் எனது வீடு உள்ளது. விபத்து நடந்த இடத்தில் மின் விளக்குகள் உள்ளது. சாலையில் இருந்து எனது வீட்டிற்கு உள்ளே செல்ல வேண்டும். இரவு 8.00 மணியளவில் இந்த விபத்து நடந்தது. விபத்து நடந்த போது சாலையின் அருகில் நின்று கொண்டிருந்தேன். விபத்து நடந்த சாலைடி தென்வடல் சாலையாகும். நான் அந்த சாலையின் மேற்கு பக்கம் நின்றுக் கொண்டிருந்தேன். விபத்துசமயத்தில் சாலையின் கிழக்கு பக்கம் பேருந்திலிருந்து இறங்கிய இறந்துபோன நபர் சாலையை கடந்தது சாலையின் மேற்கு பக்கம் நின்று பேசிக்கொண்டிருந்தார். நான் விபத்து நடந்த இடத்தின் அருகில் இருந்த பேருந்து நிறுத்தத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தேன். நான் நின்று இடத்தில் இருந்து வடக்கே சுமார் 10 அடி தூரத்தில் விபத்து ஏற்பட்டது. சாலையின் மேற்கே மண் ரோட்டில் இறந்துபோன நபர் பேசிக் கொண்டிருந்த போது விபத்து நடந்தது. போலீசார் சாலையின்

நடுவே விபத்து நடந்ததாக கூறியிருந்தால் அது தவறு. நான் காவல்துறையில் புகார் கொடுக்கவில்லை. நான் இறந்துபோன நபரை மருத்துவமனையில் சேர்த்து மருத்துவமனையில் கையெழுத்து போட்டுள்ளேன் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் ஆம்புலன்ஸிற்கு போன் பன்னவில்லை. நான் விபத்து நடந்த இடத்தில் இல்லை என்பதால் தான் நான் ஆன்புலன்ஸிற்கு போன் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர்கள் குடும்பத்திற்கு நஷ்டஈடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பார்க்காத விபத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம் / முருகன்

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.